**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**OS.No.36/2016**

**வழக்கு சாட்சி DW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **மோகினி** | தொழில் | : செவிலியர் |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : பிரகாஷ் |
| கிராமம் | : பூம்பாறை | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 61/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 21.11.2025 |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன் . நான் கடந்த 15.09.2025–ம் தேதி எனது தரப்பு சாட்சியமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் . அதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 27.02.2013 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகும்.

2. 15.02.2013 தேதியிட்ட கடை ஒத்தி ஒப்பந்தம் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகும்.

3. 28.11.2015 தேதியிட்ட ஒத்தி மேடோவர் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகும்.

4. பழனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் .161/2006 முடிவுப்பெற்ற தொடர்புடைய லோக் அதாலத் செட்டில்மென்ட் மெமோ சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும்.

5. 17.12.2014 தேதியிட்ட சம்பந்த உடன்படிக்கை ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.5** ஆகும்.

6. எனது கணவர் கொடைக்கானல் காவல்நிலையத்தில் வாதி வேலுச்சாமி மீது கொடுத்த புகார் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்த மனுவின்பேரில் வழங்கப்பட்ட பதில் அசல் **பி.வா.சா.ஆ.6** ஆகும்.

7. தேனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது தொடர்புடைய மருத்துவர் சான்று அசல் **பி.வா.சா.ஆ.7** ஆகும்.

8. எனது கணவர் பிரகாஷ் கொடுத்த புகாரின்பேரில் வழங்கப்பட்ட 27.12.2014 தேதியிட்ட புகார் மனு ஏற்பு சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகும்.

9. எனது கணவர் பிரகாஷ் கொடுத்த புகாரின்பேரில் வழங்கப்பட்ட 2.03.2016 தேதியிட்ட புகார் மனு ஏற்பு சான்றிதழ் **பி.வா.சா.ஆ.9** ஆகும்.

10. நான் கொடுத்த புகாரின்பேரில் வாதி வகையறா மீது பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.182/2016 நகல் மற்றும் அதனுடன் இணைந்த எனது புகார் மனு நகல் **பி.வா.சா.ஆ.10** ஆகும்.

11. மேற்சொன்ன குற்ற எண் தொடர்பாக வாதி வேலுச்சாமி வகையறா உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த முன்பிணை மறுக்கப்பட்டதற்கான ஆணை நகல் **பி.வா.சா.ஆ.11** ஆகும்

12. மாணிக்கம் என்பவருக்கு எனது கணவர் C.S.பிரகாஷ் வங்கி கணக்கு மூலம் ரூ.2,85,000/- அனுப்பப்பட்டது தொடர்புடைய எனது வங்கி கணக்கு புத்தகத்தின் பரிவர்த்தனை நகல் (வங்கி கணக்கு புத்தகத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **பி.வா.சா.ஆ.12** ஆகும்

( பி.வா.சா.ஆ. 6, பி.வா.சா.ஆ. 11 மற்றும் பி.வா.சா.12 ஆவணங்கள் நகல் என்றும், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு , ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது . மேலும் பி .வா.சா.ஆ.6

ஆவணம் பிராதில் சொல்லப்படாத ஆவணம் என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.21 13:50:40 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.